# ஊழியக்காரர்கள்




சகோ. பிரன்ஹாம்
அவர்களின் மேற்கோள்கள்
(படங்களுடன்)

# ஊழியக்காரர் தேவனோடு கூட தனித்திருக்க வேண்டும்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஒரு மறைக்கப்பட்ட ஜீவியம், அக்டோபர் 6, 1955 பிற்பகல், பத்தி எண் 29

**எப்படியாக ஒரு ஊழியக்காரன், அவன் பிரசங்கம் பண்ணுவதற்கும் கூட முன்பாக, அவன் ஜெபிப்பதற்கு முன்பாக, எப்போதுமே அவன் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. அவன் எதையும் செய்வதற்கு முன்பாக, அவன் அந்த அமைதியான இடத்தில் தேவனோடு கூட தனித்திருக்க வேண்டும், தேவனோடு மறைத்துக் கொள்ள வேண்டும்.** எப்படியாக அந்த, அந்தத் திரை ஒருமுறை கீழே விழ...

# தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் ஒருவனைக் குறித்த என்னவொரு அழகான காட்சி



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **தீர்மானத்தின் நேரம்,** ஜூன் 11, 1959, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தீர்மானத்தைச் செய்யும்படியான நேரமானது அவனுக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது, அவன் ஒரு பிரசங்கியாயிருந்தாலும், அல்லது ஒரு தீர்க்கதரிசியாயிருந்தாலும், அல்லது ஒரு சபை அங்கத்தினனாக இருந்தாலும், அல்லது என்னவாயிருந்தாலும், அவன் ஒரு தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.



13. அந்த நேரம் வந்தது, ஆபிரகாம் தன்னுடைய குமாரன் ஒரு அவிசுவாசியை விவாகம் செய்ய

விரும்பவில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

இன்று ஆபிரகாமுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாகிய கிறிஸ்தவர்களுக்கும் அது ஒரு நல்ல தீர்மானமாகும், அவர்களுடைய பிள்ளைகளைக் குறித்தும் அதே தீர்மானத்தைச் செய்வது.

இப்பொழுது, அந்த அவிசுவாசியான பெண்கள் எவ்வளவு கவர்ச்சி வாய்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு அருமையான பெண்களாக இருந்தாலும் அது எந்த வித்தியாசத்தையும் உண்டாக்குவதில்லை, ஆனால் ஆபிரகாம் அம்மாதிரியான காரியத்தோடு தன்னுடைய குமாரன் இணைக்கப்படுவதை விரும்பவில்லை.

எனவே, அவன் யாரை விவாகம் செய்ய வேண்டும் என்பதைக் குறித்து தீர்மானம் செய்ய வேண்டியிருந்த



ஒரு நேரத்தை உடையவனாய் இருக்க வேண்டியிருந்தது.

பிறகு ஈசாக்கிற்காக இந்த மணவாட்டியை தேர்ந்தெடுக்கும்படி அவன் யாரை அனுப்ப வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அவன் செய்ய வேண்டியதாயிருந்த சமயம் வந்தது. அந்த நேரம் வந்த போது, அவன் தன்னுடைய ஊழியக்காரர்கள் எல்லாரையும் நோக்கிப் பார்த்தான்.



14. நாம் இங்கே ஆபிரகாமைக் குறித்த ஒரு அழகான பாடத்தில், பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனுக்கு ஒரு மணவாட்டியைச் சென்று கண்டுபிடிக்கும்படி ஒரு

ஊழியக்காரனைத் தேடுவதைக் குறித்துள்ள பிதாவாகிய தேவனின் முன்னடையாளமாக நாம் ஆபிரகாமைக் கற்றுக் கொள்கிறோம். அதைத்தான் பிதாவானவர் இன்று செய்து கொண்டிருக்கிறார்.

அவர் மணவாட்டிக்கு அனுப்பும் இந்தச் செய்தியை எடுத்துச் செல்லும்படி, அவர் நம்பிக்கை வைத்திருக்கிற யாரோ ஒருவரை கண்டுபிடிக்கும்படி அவர் தம்முடைய குழுவை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

எலியேசர் தான் அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவன் என்று அவன் தெளிவாக முடிவு செய்தான், ஏனென்றால் எலியேசர் ஒரு நம்பகமான ஊழியக்காரன் என்பதைக் கண்டுகொண்டிருந்தான்.

அவன் விசுவாசமுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும், நேர்மையுடையவனாகவும், நீதிமானாகவும், கபடமில்லாதவனாகவும் இருந்தான்.



தேவன் தம்மிடத்திலிருந்து சபைக்கு ஒரு செய்தியை கொண்டு செல்ல தேர்ந்தெடுக்கக் கூடிய ஒரு ஊழியக்காரனுடைய மாதிரி இதுதான்: நீதிமானாயிருக்கிறான் என்று நிரூபிக்கப்பட்ட ஒருவனைப் போலிருத்தல். ஒரு குமாரனைத் தேர்ந்தெடுத்தல், அல்லது அவனை ஸ்தானத்தில் பொருத்துதல் என்பதன் பேரில் இங்கே சென்ற முறை கொடுக்கப்பட்ட என்னுடைய செய்தி உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? அவன் எப்படியாக முதலில் நிரூபிக்கப்பட்டு, அதன்பிறகு குடும்பத்திற்குள் புத்திர சுவிகாரம் பெறுகிறான் அல்லது அந்த ஸ்தானத்தில் பொருத்தப்படுகிறான் என்பதைப் பற்றி.

15. ஆபிரகாமுக்கு தேவையாயிருந்த வைகளை எலியேசர் நிறைவு செய்கிறவனா யிருந்தான். எலியேசர் முன்மாதிரியான ஊழியக்காரனாக சித்தரிக்கப்படுகிறான். அவன் அனுப்பப்படுவது வரை அவன் எவ்வாறு போகாமல் இருந்தான் என்பதைக் குறித்து ஆதியாகமம் 24ம் அதிகாரத்தில் நீங்கள் அந்தக் கதையை வாசித்திருக்கிறீர்கள்.

அநேகர் வெறுமனே அதைக் கொண்டு எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியும் என்பதற்காக செல்கின்றனர். இந்த மற்றவர்களோ தங்களுக்காக ஒரு பெரிய பெயர் பிரஸ்தாபத்தை உண்டாக்கிக் கொள்வதற்காக செல்கின்றனர். மற்றவர்கள் பிரபலமாக இருப்பதற்காக போகின்றனர். மற்றவர்கள் தங்களை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஏதோவொரு



ஆட்சி முறைமை (regime) அனுப்புவதன் காரணத்தினால் போகின்றனர்.

ஆனால் சிலர் தேவன் தங்களை அனுப்புவது மட்டுமாகக் காத்திருப்பார்கள். முன்மாதிரியான ஊழியக்காரன் அதைச் செய்வான்.

மேலும் கவனியுங்கள். அவன் போன போது, அவன் எங்கே அனுப்பப்பட்டானோ அங்கு மாத்திரம் சென்றான், அதிக பணமுண்டு என்ற காரணத்தினால் சிலர் இங்கே போகலாம் என்றோ, அல்லது பெரிய கூட்டம் உண்டு என்ற காரணத்தினால் இங்கே போகலாம் என்பதோ அல்ல.

அவன் எங்கே அனுப்பப்பட்டானோ மிகச்சரியாக அங்கே அவன் சென்றான்.

16. தேவன் அனுப்புகிற எந்தவிடமா யிருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் அசையும் போது, தானும் அசையும் மனிதர்களையே தேவன் இன்று தேடிக் கொண்டிருக்கிறார்.

அதுதான் முன்மாதிரியான ஒரு ஊழியக்காரன்.

அது மட்டுமல்ல, அவன் தன்னுடைய செய்திகளை பிரசங்கிக்க வேண்டிய தன்னுடைய இடத்திற்கு அவன் போன போது, அவன் தன்னை ஒருபோதும் தற்புகழ்ச்சி செய்யவேயில்லை. அவன் எவ்வளவு மகத்தானவன் என்பதைப் பற்றியோ, அல்லது தன்னுடைய கூட்டங்கள் எவ்வளவு மகத்தானதாய் இருந்தது என்பதைப் பற்றியோ, அல்லது தன்னைப் பற்றியுள்ள ஏதாவது எவ்வளவு மகத்தானதாயுள்ளது என்பதைப் பற்றியோ அவன் ஒருபோதும் பேசவில்லை.



அவன் தன்னைப் பற்றி புகழ்ந்து பேசும் ஒருவனாகவோ, அல்லது பெருமையுள்ள ஒருவனாகவோ இருக்கவில்லை. ஆனால் அவன் தன்னுடைய எஜமானைக் குறித்தும், தன்னுடைய எஜமானுடைய ஐசுவரியத்தைக் குறித்தும், தன்னுடைய எஜமானுக்கு சொந்த மான ஒவ்வொன்றிற்கும் சுதந்தரவாளியாகப் போகிற ஒரு குமாரன் தன்னுடைய எஜமா னுக்கு உண்டு என்பதைக் குறித்து மாத்திரம் பேசினான்.

தேவனுடைய உண்மையான ஊழியக் காரன் ஒருவனைக் குறித்த என்னவொரு அழகான காட்சி:



தன்னுடைய முழு கவனமும் எஜமானின் மேல் தான் இருக்கிறது, எஜமானைக் குறித்தும், குமாரனைக் குறித்துமே அல்லாமல் தன்னைப் பற்றியே ஜனங்களிடம் கூறிக் கொண்டிருக்க மாட்டான்.

அவர் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாகப் போகிறார். அவன் தன்னைக் குறித்தோ அல்லது தன்னுடைய– – அல்லது தன்னுடைய மகத்தான (தன்னை அனுப்பின) அதிகார குழுவினரைக் குறித்தோ, அல்லது தன்னுடைய ஸ்தாபனத்தைக் குறித்தோ அல்லது அவன் கொண்டிருக்கும் ஏதோவொரு தலைமை அலுவலகத்தைக் (affiliation) குறித்தோ புகழ்ந்து பேசும்படி அவன் நேரத்தைக் கொண்டிருக்காமல், அந்த எஜமானைக் குறித்தும், அந்த குமாரனைக் குறித்தும் பேச அதிக நேரத்தை அவன் கொண்டிருக்கிறான்.

★★★★★

# தேவன் உங்களை அழைத்திருந்தாலொழிய பிரசங்கம் செய்யாதீர்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: வேறொருவரால் விளையும் பாதிப்பு 62-1013

நான் வர்த்தகரிடம், "சகோதரரே, ஏதோ தவறுள்ளது. நீங்கள் வர்த்தகர். முதலாவதாக உங்களுக்கு அணுகும் முறை தெரியவில்லை. இந்த ஊழியத்தை எப்படி அணுகுவது என்பது உங்களுக்குப் புரியவில்லை. ஏனெனில் ஊழியம் என்பது தேவனால் அழைக்கப்பட்டு அளிக்கப்பட்ட வரம்" என்றேன்.

தேவன் சபையில் முதலாவதாக அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், போதகர்களையும், சுவிஷேகரையும், மேய்ப்பர்களையும்

ஏற்படுத்தினார். சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக அவர்களை ஏற்படுத்தினார்.

வர்த்தகர் சாட்சி கூற வேண்டும். ஸ்தீரிகள், வீட்டு பெண்மணிகள்— நீங்கள் வேறொருவர் வீட்டில் வேலைக்காரியாயிருந்தாலும் சாட்சி கூறுங்கள்.

**தேவனுடைய ராஜ்யத்துக்கென்று உங்களாலான எல்லாவற்றையும் செய்யுங்கள்.**

ஆனால் உங்கள் சொந்த கருத்துக்களை உள்ளே புகுத்தாதீர்கள், செய்தி கூறுவதை மாத்திரமே கூறி அப்படியே சென்று கொண்டிருங்கள் (பாருங்கள்?). அப்பொழுது ஒருக்கால் உங்களால் மற்றவர்களுக்கு பாதிப்பு

ஏற்படலாம், **தேவன் உங்களை அழைத்திருந்தாலொழிய பிரசங்கம் செய்யாதீர்கள். நீங்கள் சாட்சி கூறுவதுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால் நீங்கள் தவறான பதவிக்கு சென்று எல்லாவற்றையும் குழப்பிவிடுவீர்கள். அவ்வளவுதான். அது தேவனை ஒருக்காலும் பிரீதிபடுத்தாது.** உசியாவின் சம்பவம் அதை நிரூபிக்கிறது.

★★★★★

# பணம், பெண், புகழ்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**ஒரு மனிதனை கர்த்தர் சிறிதளவு ஆசீர்வதிக்கும் போது மூன்று முக்கியமான காரியங்களான பணம், பெண், புகழ் என்பவை அவனைத் திரும்பவும் அவனுடைய பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து விடுகின்றன என்பதை நான் கவனித்திருக் கிறேன். வேதத்தில் பாலாக் என்பவன் தீர்க்கதரிசியாகிய பிலேயாம் என்பவனுக்கு அதிகமான பணத்தைக் கொடுக்க முன் வந்த போது, அந்த பணத்தின் காரணமாக பிலேயாம் தன்னுடைய வரத்தை விற்றுப் போட்டான் என்று பார்க்கிறோம்** (இச்சம்பவம் உங்களுக்குத் தெரிந்த ஒன்றாகும்)

10. **சிம்சோன், தெலிலாளிடம் தன்னை விற்றுப் போட்டான்.** இந்தப் பெண் அவனை தன் மடியிலிருத்தி, அவன் தன்னிடமுள்ள கர்த்தரின் இரகசியத்தை வெளியிடும் வரை அவனை மயக்கினாள்.

11. **சவுல் புகழுக்காக தேவ வரத்தை விற்றுப் போட்டான்.** அவன் ஒரு தீர்க்கதரிசியா

யிருந்தான். (தீர்க்கதரிசிகளில் ஒருவனாக அவன் எண்ணப்பட்டான் என்று வேதம் கூறுகிறது). **இன்னொருவரைக் காட்டிலும் தன்னை பெரியவனாக்க விரும்பி புகழுக்காக அவன் விழுந்து போனான்.**

12. **மனிதன் விழுந்து போகத் தக்கதான இந்த மூன்று முக்கியமான காரியங்களை நான் வேதத்திலிருந்து கண்டு, எல்லா நேரங்களிலும் இந்த மூன்று காரியங்களை நான் தவிர்க்கத்தக்கதாக நம்முடைய பரலோகப் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்தேன்.**

13. **கூட்டங்களில் ஒருபோதும் பணத்திற் காக பிச்சையெடுக்க மாட்டேன் என்று தேவனிடம் நான் வாக்களித்தேன்.** அது மட்டுமல்ல, **காணிக்கை தட்டை ஜனங்கள் மத்தியில் அனுப்பி (இத்தகைய காணிக் கையின் மூலம் பல ஆயிர டாலர்கள் கிடைக்கும் என்று நான் அறிந்திருந்தேன்) கூட்டங்களுக்குத் தேவையான பண உதவியை நான் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர் என்னைக் கைவிடுவா ரென்றால், நான் ஊழியத்தை விட்டு விட்டு**

**என் வீட்டிற்குத் திரும்பி விடுவேன் என்றும் கர்த்தரோடு ஒரு உடன்படிக்கை செய் திருந்தேன்.**

14. இந்தக் காரியத்தில், யாரையும் எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் என் பணத் தேவையை அவர் அற்புத விதமாக சந்தித்தார். ஜனங்கள் பணம் தரத் தக்கதாக சற்று அவர்களை நிர்பந்திக்க நான் அனுமதிக்காததினால் கூட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யும் மூன்று அல்லது நான்கு நிர்வாகிகள் தங்கள் வேலையையும் இழந்து விட்டனர். **இத்தகைய காரியத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது.**

*செய்தி:* **உள்திரை,** ஜனவரி 21, 1956, ஜெபர்சன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★

## ~ 5 ~



~ 6 ~









~ 8 ~









ஆனால் பரிசுத்தமாக்கப்பட்ட,
தேவனுக்கு பிரதிஷ்டை
செய்யப்பட்ட பரிசுத்த ஜீவியத்தை
பிசாசு காணும் பொழுது, அதுவே
அவனை மிகவும் பாதிக்கிறது.
அவனைக் குறித்து யார் எது
சொன்னாலும், அவனை
எப்படியெல்லாமோ இழிவாக
சொன்னாலும், அதைப்பற்றி
சலனம் அடையாமல் அவன்
எவ்வளவு இனிமையாக
இருக்கமுடியுமோ அவ்வளவாய்
இனிமையாய் இருந்து,
தேக்கமடையாமல், தொடர்ந்து
நல்வழியில் முன்னேறிச்
செல்லுகிறான். ஓ அவ்விதமான
ஜீவியமானது, பிசாசை தூக்கி
யெறிந்துவிடும்;
பிசாசை அசைக்கும்
இடி முழக்கம்
அதுவே

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

செய்தி: **இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்,**

ஜனவரி 8, 1961, இந்தியானா, அமெரிக்கா

---

116. “சிங்காசனத்தின் சத்தம்” என்பதை இப்பொழுது பார்ப்போம். இந்த சிங்காசனத்தை கவனியுங்கள். “சிங்காசனத்திற்கு முன்பாக ஏழு நட்சத்திரங்கள்” நட்சத்திரங்களின் சத்தம். “சத்தங்கள்” என்பதைக் கவனியுங்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தில் அல்லது 5ம் அதிகாரத்தில் இங்கே நாம் காண்பது என்னவெனில், “அந்தச் சிங்காசனத்திருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன” ஒரு சத்தம் அல்ல அது, “சத்தங்கள்” என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது.

அது என்ன? தேவன் சபையிடம் ஏழு ஆவிகள் மூலமாக தன்னையே பிரதிபலித்து காண்பித்துக்கொண்டு, பேசிக் கொண்டிருக்கிறார்.

**தேவனுடைய உண்மையான அபிஷேகம் பெற்றவர் பேசும்போது, அதுவே தேவனுடைய சத்தமாயிருக்கிறது.**

அதைப் புறக்கணிப்பதானது, அந்த குத்துவிளக்கை அகற்றிவிடுவதாகும். பார்த்தீர்களா?

"சத்தங்கள்", ஏழு சபைக் காலங்களின் சத்தம் (இந்த மூலையில்) சத்தங்கள் இடிமுழக்கத்துடனும், மின்னலுடனும் பேசிக் கொண்டிருக்கின்றன.

117. இந்நாட்களில் இவ்வாறு அவர்கள் கூறுகிறார்கள்: "நல்லது, பிரசங்க பீடத்திலிருந்து 'நரகம்' என்ற சொல்லை உபயோகிப்பதை நாங்கள் விசுவாசிக்கவில்லை" என்கின்றனர். ஓ இரக்கம் வேண்டும். ஊ! **தேவனுடைய வார்த்தையை அடக்கி வைக்காத தேவ மனிதனே நமக்குத் தேவை.**

118. **யாவருமே ஒரு பிரசங்கியாக முடியாது, ஆனால் உங்களுக்கு ஒரு சத்தம் உண்டு.** ஜனங்களுக்கு ஒரு பிரசங்கத்தை உங்களால் பிரசங்கிக்க முடியவில்லையெனில்....

நீங்கள் ஒரு பிரசங்கியாயிருந்தால், பிரசங்க பீடத்திலிருந்து பிரசங்கிக்க அழைக்கப்பட்டுள் ளீர்கள். **அவ்வாறு அழைக்கப்படவில்லையெனில், அப்படி யிருந்தும் ஜனங்களுக்கு முன்னால், உங்கள் வாழ்க்கையே ஒரு பிரசங்கமாக அமைய வேண்டும், அதன்மூலம் நீங்களும் ஒரு பிரசங்கியாகத்தான் இருப்பீர்கள்.**

**உங்களுடைய பிரசங்கமானது உங்களால் வாழ்ந்துகாட்டப்படட்டும், அவ்வாறு செய்தால், அதுவே தேவனுடைய சத்தமாக இருக்கிறது, அதை புறக்கணிக்கிறவர்கள் மேல் அது நிந்தையைக் கொண்டுவரும்.**

அவர்கள் கூறுவார்கள்: "அவன் அல்லது அவளுடைய ஜீவியத்திற்கெதிராக ஒருவரும் குற்றஞ்சுமத்த முடியாது. அவர்கள் இனிமை யானவர்கள், வாழ்ந்து காட்டுகிறார்கள். தேவனுடைய மனிதன் என்று சொல்லும்படி யாராவது ஜீவித்திருக்கிறார்களெனில், அது அந்த மனிதன்தான் அல்லது அந்த பெண்மணிதான்" என்பார்கள்.

**பாருங்கள், நீங்கள் பிரசங்கத்தை வாழ்ந்து காட்டுங்கள், அதுவே உங்கள் பிரசங்கமாக இருக்கட்டும்.**

**நீங்கள் அவர்களுக்கு ஒரு பிரசங்கியாக இருக்கும்படி அழைக்கப்படாவிடில், பிரசங்கியா வதற்கு முயற்சிக்கவேண்டாம்.** நீங்கள் அவ்வாறு செய்யாவிடில், எல்லாவற்றையும் போட்டு குழப்பி, குழப்பம் உண்டாக்கி, மக்களை நீங்கள் சிக்கலில் மாட்டி வைத்து, என்ன நடக்கிறதென்பதையே நீங்கள் கெடுத்து, உங்களையும்கூட கெடுத்துக் கொண்டுவிடுவீர்கள்.

**எனவே உங்கள் பிரசங்கத்தை வாழ்ந்து காட்டுங்கள்.**

119. **பிரசங்கியானவன் தன்னுடைய பிரசங்கத்தை பிரசங்கிக்க அழைக்கப் பட்டிருப்பதோடு, அதை தன்னுடைய வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டவும்கூட அழைக்கப்பட்டுள்ளான்.**

**உங்களால் பிரசங்கத்தின்படி வாழ்ந்துகாட்ட இயலாவிடில், நீங்கள் பிரசங்கப்பதையே நிறுத்தி விடுங்கள்.**

**ஆனால் நீங்கள் செய்கிற பிரசங்கத்தின் படியெல்லாம் வாழ்ந்துகாட்டவேண்டும் என்று உங்களைப் பற்றி எதிர்பார்க்கப்படுகிறது.**

120. நல்லது, இங்கே “சத்தங்கள்” இருந்தன. ஓ! ஜெபர்சன்வில்லில் வாழ்ந்துகாட்டுகிற சத்தங்கள் ஆயிரக்கணக்கில் வேண்டுமென்று எவ்வளவாய் வாஞ்சிக்கிறோம்!

தேவனுடைய இடிமுழக்கமாக இருந்து, இன்றைக்கு பூமியில் கறை திரையின்றி, இனிமையிலும் பரிசுத்தத்திலும், தூய்மையிலும், கறைபடாத ஜீவியங்களிலும் நடந்து தேவனுடைய இடிமுக்கத்தை முழங்கித் திரிபவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

ஆம், ஐயா, உண்மையான கிறிஸ்தவர்கள், சத்துருவுக்கு எதிராக இடிமுக்கமாக இருக்கிறார்கள்.

நீங்கள் எவ்வளவாய் கத்துகிறீர்கள் என்பதைக் குறித்து பிசாசு அக்கறைப் படுகிறதில்லை; அல்லது எவ்வளவாய் உங்களால் குதிக்கமுடிகிறது, அல்லது எவ்வளவு உரத்த சத்தமாய் கத்துகிறீர்கள் என்பதைப் பற்றி பிசாசு கவனிக்கிறதில்லை.

ஆனால் பரிசுத்தமாக்கப்பட்ட, தேவனுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட

**பரிசுத்த ஜீவியத்தை பிசாசு காணும் பொழுது, அதுவே அவனை மிகவும் பாதிக்கிறது.**

**அவனைக் குறித்து யார் எது சொன்னாலும், அவனை எப்படியெல்லாமோ இழிவாக சொன்னாலும், அதைப்பற்றி சலனம் அடையாமல் அவன் எவ்வளவு இனிமையாக இருக்கமுடியுமோ அவ்வளவாய் இனிமையாய் இருந்து, தேக்கமடையாமல், தொடர்ந்து நல்வழியில் முன்னேறிச் செல்லுகிறான்.**

**ஓ அவ்விதமான ஜீவியமானது, பிசாசை தூக்கியெறிந்துவிடும்; பிசாசை அசைக்கும் இடி முழக்கம் அதுவே.**

121. அவரால் பில்லிகிரகாமைப் போலவோ, அல்லது ஓரல் ராபர்ட்ஸைப் போலவோ அல்லது மகத்தான புகழ்மிக்க ஒரு பேச்சாளரைப் போலவோ பிரசங்கிக்க

முடிந்தால், அவருக்கு அது இப்படியாக இருக்குமே" என்று கூறுகிறீர்கள். ஓ, இல்லை!

**சில வேளைகளில் பிசாசானவன் அதைப்பார்த்து நகைக்கிறான்.** ஒன்றுமற்ற ஒன்றைப்போல அதைப்பற்றி அவன் கவனம் செலுத்துகிறதில்லை. வேத தத்துவமெல்லாம் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள், எல்லாவித வேதக்கல்லூரியின் பயிற்சியும் பெற்றிருக்கிறீர்கள்;

**பிசாசானவன் பின்னால் உட்கார்ந்து கொண்டு அதைப்பார்த்து நகைக்கிறான். ஆனால் அவன் ஜீவனுள்ள ஒன்றை காணும்போதோ!**

122. அன்றைக்கு இருந்த சீஷர்களைப் பாருங்கள். சந்திரரோகியாயிருந்த சிறுவனிடத்திலிருந்து பிசாசைத் துரத்த, "பிசாசே, அவனைவிட்டு வெளியே வா, அவனைவிட்டு வெளியே வா, அவனைவிட்டு வெளியே வா" என்று சொல்லிக் கொண்டிருந் தார்கள்.

123. அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த பிசாசானவன், "நீங்கள் உங்களையே வெட்கத்திற்குட்படுத்திக் கொண்டிருக்கவில்லையா? என்னைத் துரத்துங்கள் என்று இயேசுவானவர் உங்களுக்கு கட்டளை கொடுத்தார். ஆனால் உங்களில் ஒருவரால்கூட என்னைத் துரத்த முடியாது" என்று சீஷர்களிடம் கூறியிருப்பான்.

124. ஆனால் சகோதரனே, அவன் இயேசு வருவதைக் கண்ட போது; அவர் அமைதியாக நடந்துவந்தார். ஊ ஊ ஓ! அவர் ஒன்றும் சொல்லத் தேவையாயிருக்கவில்லை.

ஏற்கனவே பிசாசு அவரைக் கண்டு பயந்து போயிருந்தான். அவன் அந்தப் பிள்ளையைவிட்டு வெளியேறியாக வேண்டும் என்பதை அறிந்திருந்தான்; ஏனெனில், ஜீவனுள்ளவர் அங்கே வந்து விட்டார், அவர் வெறும் ஒரு பிரசங்கமாக மட்டுமல்ல, ஆனால் அவர் ஜீவனாகவும் இருக்கிறார். அவர், "அவனைவிட்டு வெளியே வா" என்று கூறினார். ஓ, என்னே! அதுவே

போதுமாயிருந்தது. **அமைதியாக அவர் பேசினார். அவர், தான் என்ன பேசுகிறோம் என்பதை அறிந்திருந்தார். அவர், தான் என்ன செய்கிறோம் என்பதை அறிந்திருந்தார்.**

★★★★★

# நீங்கள் பிறருக்காக ஜீவித்தால் வாழ்க்கையின் பாரம் இலகுவாக்கப்படும்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

16. “**ஆனால் இத்தனை ஆண்டுகளும், சுமார் முப்பத்தொன்று வருட ஊழிய காலம் முழுவதிலும் நான் அவர் வரக்கூடிய அவ்வேளைக்காக எனது இருதயத்தை ஆயத்தமாக்கி வைத்துள்ளேன். எனவே அவர் எப்பொழுது வருவார் என்பதைப் பற்றி பிரச்சினையில்லை**” **என்று கூறினேன்.**

அவர், “அது உண்மைதான்” என்று பதிலளித்தார். “**எனக்கு இருக்கும் மிகப்பெரிய புளகாங்கித உணர்வு எதுவென்றால், இத்தனை காலமும் மற்றவர்களுக்காக நான் ஜீவித்துக் கொண்டிருப்பதுதான்**” **என்று நான் கூறினேன்.**

17. “அதுதான் சரியான வாழ்க்கையாயிருக்கிறது, அதுவே வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகிறது. வாழ்க்கையானது நீங்கள் உங்களுக்கென்று என்ன செய்துகொள்ள முடிந்தது அல்லது நிறைவேற்றிக் கொண்டதோ அல்ல, மற்றவர்களுக்காக நீங்கள் என்ன செய்ய இயலக்கூடியதாக உள்ளது என்பதுதான்” என்றார் அவர்.

18. ஆகவே, அப்படி வாழ்வதுதான், நீங்கள் உண்மையாக வாழ்கிறீர்கள் என்று இருக்கிறது.

**நம்மில் யாராவது ஒருபோதும் அவ்விதம் பிறருக்காக வாழ்ந்திராமல் இருப்பது நேரிட்டிருந்தால், பிறருக்காக வாழ முயற்சி செய்யுங்கள். அதற்கு ஒரு முயற்சி செய்யுங்கள்;** அப்படி செய்யும் பொழுது, நீங்கள் வாழும் வாழ்க்கையிலிருந்து, உங்களுக்கு என்ன பெற்றுக்கொள்ளலாம் என்பதற்காக, நீங்கள் உங்களுக்காக வாழாமல் யாருக்காவது உங்கள் வாழ்க்கையின் மூலம் பயன்தரத்தக்க அளவுக்கு ஜீவியுங்கள், **அதன்மூலம் வாழ்க்கையானது எவ்வளவு இன்னும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது என்பதை நீங்கள் காணுங்கள். பிறருக்காக வாழ்வதன் மூலம் ஐசுவரியங்களைவிட அல்லது நீங்கள் சிந்திக்கும் எந்தவொன் றையும் விட மேலாக நீங்கள் ஆசீர்வதிக் கப்படுவதை காண்பீர்கள்.** வாழ்க்கையானது பாரம் மிகுந்ததாயிருக்கிறது.... **எனவே நீங்கள் பிறருக்காக ஜீவித்தால் வாழ்க்கையின் பாரம் இலகுவாக்கப்படும். நீங்கள் பிறருக்காக ஜீவிப்பதைச் செய்ய உங்களால் கூடும்.**

**பிறருக்காக நீங்கள் ஏதாவது பயனுள்ள காரியத்தைச் செய்தாலொழிய, அதினால் கிடைக்கும் சந்தோஷத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள்.**

19. கர்த்தருக்கென்று நான் செய்துவரும் ஊழியத்தில் விரைவில் அது முப்பத்தொன்று ஆண்டுகளை எட்டப்போகிறது, அதைப்பற்றி நான் எண்ணிப் பார்க்கும்படி நேரிடுகிறது. எந்தவொரு மனிதனும் தனது பணியின் கடைசிக் கட்டத்தை எட்டவேண்டியிருக்கும் பொழுது, அவன் தனது இறுதியான மணி நேரத்தை வந்தெட்டுகையில், அவன் நடந்து வந்த பாதையை பின்னால் திரும்பிப் பார்த்து, வாழ்க்கையில் என்ன செய்து நிறைவேற்றியிருக்கிறோம் என்பதும், என்ன நேரிட்டது என்பதும் தனக்குள், "நீ ஏதாவது சாதித்தாயா?" என்ற கேள்வி எழும்பும் என்றும் நான் கருதுகிறேன். **நான் சற்று முன்பு கூறியவண்ணமாக, மற்றவர்களுக்காக நீங்கள் என்ன செய்தீர்களோ அதுவே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்.**

20. எனது வாழ்க்கைப் பாதையின் முடிவை நான் போய் சேரும் பொழுது, அங்கே என்ன இருக்குமோ என்று நான் அடிக்கடி அறிய

விரும்பியதுண்டு. அவ்வேளை எப்பொழுது நேரிடும் என்பதை நாம் அறியோம்; நம்மில் எவரும் அறியோம். ஆகவே, வாழ்க்கையில் இதுவரை நான் நடந்து வந்திருக்கும் கடந்த கால பாதையை திரும்பிப் பார்த்து, அப்பாதையில் நான் வெவ்வேறு குன்றுகளையும், முட்புதர் நிறைந்த பாதைகளையும், பாறைகளையும், கஷ்டமான இடங்களையும், மிருதுவான பயணங்களையும் என் வாழ்வில் கடந்து வந்ததைப் பற்றியும், அவ்விதமான வேளைகளில் நான் என்ன செய்தேன் என்பதையும் பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தேன். அவையாவும் இந்நாட்களில் ஒன்றில் நான் கடந்து சென்று விடும் வேளையில் தெளிவாகத் தெரியவரும். நம் ஒவ்வொருவரிலும் அவ்வாறுதான் சம்பவிக்கும். ஒவ்வொருவருக்கும் அவ்வேளை வரும்பொழுது, அது தெளிவாகத் தெரியவரும் என்பதைப் பற்றி நாம் யாவரும் நிச்சயமுள்ளவர்களாய் இருப்போம்.

*செய்தி:* 61-06-11 *வெளிப்படுத்தின விசேஷம் 5 அதிகாரம்* #1

★★★★★

உங்களுக்கு
வல்லமை
வேண்டுமானால்,
தேவனுக்கு முன்பாக
உங்களை
எவ்வளவு தூரம்
தாழ்த்த முடியும்
என்பதை
பாருங்கள்

~ உ ~

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## மத்தேயு 23:12

**தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.**



## செய்தி: **உன்னைத் தாழ்த்து**, Jeffersonville, Indiana, USA, 63-07-14E

31. உங்களுக்குத் தெரியுமா, ஜனங்கள் வல்லமையைப் பெற விரும்புகின்றனர், ஆனால் உண்மையில் வல்லமை என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரிவதில்லை. பாருங்கள், அதனுடன் எது சம்பந்தப்பட்டுள்ளது என்பதை அவர்கள் அறிவதில்லை.

**மேலே செல்லும் வழி எப்பொழுதுமே கீழே உள்ளது.**

**உங்களுக்கு வல்லமை வேண்டுமானால், தேவனுக்கு முன்பாக உங்களை எவ்வளவு தூரம் தாழ்த்த முடியும் என்பதை பாருங்கள்.**

**உலகப் பிரகாரமான உங்கள் சிந்தனை அனைத்தையும் அறவே அகற்றி, உங்களை தேவனுக்கு**

முன்பாக தாழ்த்துங்கள். அப்பொழுது, கட்டிடத்தின் எல்லாவிடங்களிலும் ஒலி மிகுந்த சத்தமிடும் மனிதனைக் காட்டிலும் உங்களுக்கு அதிக வல்லமை இருக்கும்.

ஏனெனில் உங்களையே நீங்கள் அடக்கி ஆண்டு, கிறிஸ்துவுக்கு உங்களை அர்ப்பணித்து, அவருக்கு முன்பாக உங்களை தாழ்த்த உங்களால் முடிகிறது. அதுவே உண்மையான வல்லமை.

அகந்தையில்லாத, உண்மையில் தாழ்மையுள்ள, இனிமையுள்ள சபையை எனக்குக் காண்பியுங்கள். அப்பொழுது தேவனுடைய வல்லமையையும் ஆதரவையும் கொண்ட சபையை உங்களுக்குக் காண்பிப்பேன். அது உண்மை. அது தான் அதற்கு அவசியம், தாழ்மை.

**நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்தி, நமது மூலம் தேவன் கிரியை செய்ய அவரை அனுமதித்தல். நாம் மிகுந்த சத்தமிட வேண்டிய அவசியமில்லை.**

32. என் தந்தை கூறினது போன்று, அவர் வண்டியை வயல் வழியாக கொண்டு சென்ற போது, ஒவ்வொரு முறை அவர் மேடான பாகத்தின் மேல் மோதினபோது, வண்டி பயங்கரமாக குலுங்கினது. ஆனால் திரும்பி வரும் வழியில் அவர் அதே மேடான பாகத்தின் மேல் மோதின போது, வண்டி குலுங்கி சத்தமிடவில்லை. ஏனெனில் அது அநேக நன்மையான பொருட்களால் நிறைந்திருந்தது.

அது முற்றிலும் உண்மையென்று நான் கருதுகிறேன். **பாருங்கள், தேவனுடைய நன்மையான காரியங்களால் நாம் நிறைந்திருக்கும் போது, ஆவியின் கனி நமது மூலம் வெளிப்படும்.**

1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் பவுல், “என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை” என்று குறிப்பிடுகிறான். பாருங்கள், அதை நாம் செய்ய வேண்டும்.

33. எல்லாவற்றிற்கும் மேலாக, நமது ஆத்துமாக்களுக்கு நாம் தனிப்பட்ட விதத்தில் தேவனுக்கு முன்பாக உத்திரவாதமுள்ளவர்களாய் இருக்கின்றோம்.

**தன்னைத் தாழ்த்துகிற எந்த மனிதனையும் தேவன் உயர்த்துகிறார் என்பது நான் கண்டறிந்த உண்மை.**

பாருங்கள், அது நீங்கள் பரலோகத்துக்கு செல்லுதல், நான் போகிறேன், அல்லது அவர் போகிறார் என்றல்ல. நீங்கள் போகின்றீர்கள், பாருங்கள், நீங்கள் முதலாவதாக.

இதற்கு நீங்கள் கவனம் செலுத்தி, கர்த்தருக்கு முன்பாக இனிமையாக வரவேண்டியவர்களாயிருக்கிறீர்கள்.

**தன்னைத் தாழ்த்துகிற எந்த மனிதனையும் தேவன் உயர்த்துகிறார் என்பது நான் கண்டறிந்த உண்மை.**

**தனக்கு எல்லாம் தெரியும் என்று மார்பை உந்திக்கொண்டு நடக்கும் மனிதனிடம் நீங்கள் ஒன்றும் கூற முடியாது. அவன் அகந்தையுள்ளவன். அவன் எதையும் அடைவதில்லை.**

**ஆனால் தன்னைத் தாழ்த்தி இனிமையாய் நடக்கும் மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள்.**

34. ஒரு சபையை உண்டாக்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனிடம் அன்றொரு நாள் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் ஒரு ஸ்தாபனத்திலிருந்து வெளி வந்தவர்கள். அது சகோதரன் போஸ்.

அவர்கள் நீண்ட காலமாக அந்த மகத்தான சபையில் இருந்தனர். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து வந்தார். அதன் பிறகு அதிலிருந்த மக்கள் மற்றவர்களைப் போல் மெருகேற்றப்பட்டு, அதை ஒரு ஸ்தாபனமாக்க முனைந்தனர். அவர்கள் அப்படி செய்த போது... இந்த தாழ்மையுள்ள கிறிஸ்தவர்கள் அதை விரும்பவில்லை. அவர்களுடைய வாழ்நாள் முழுவதும், அதற்கு விரோதமாக அவர்கள் கற்பிக்கப்பட்டு வந்தனர். எனவே அவர்கள் வெளிநடந்தனர்.

இப்பொழுது அவர்களுக்கு ஒரு குழு உள்ளது. கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து, அவர்கள் மறுபடியும் நான்கு அல்லது ஐந்தாயிரம் பேர்களை கொள்ளும் ஒரு இடத்தில் கூடுகின்றனர்.

35. அன்றொரு நாள் அவர்கள் என் சபை அலுவலகத்திற்கு வந்திருந்தனர். அவர்களுடைய தலைவர்களில் ஒருவரான சகோ. கார்ல்சனும் மற்றவர்களும் "சகோ. பிரன்ஹாமே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டனர்.

நான், "**மற்ற ஸ்தாபனங்களில் நன்மதிப்பு பெறாத ஒரு நல்ல, உத்தமமான, இனிமையான, ஜீவனை வாழ்ந்து காட்டும் சகோதரனை உங்கள் மேய்ப்பனாக தெரிந்து கொள்ளுங்கள், தேவன் மற்றவைகளைப் பார்த்துக் கொள்வார்**" என்றேன்.

பாருங்கள், நான், "**ஆடுகளை போஷிக்கும் ஒரு நல்ல மேய்ப்பனை, எல்லாவற்றிலும் தாழ்மையாயிருப்பவரை தெரிந்த கொள்ளுங்கள். தேவன் மற்றவைகளை கவனித்துக் கொள்வார்.**

எல்லாம் தெரிந்து பெரிய மனிதன் வந்து, இது இப்படியிருக்க வேண்டும் என்று சொல்லி சீர்படுத்துவதல்ல. அது ஒருபோதும் கிரியை செய்யாது. இப்படிப்பட்ட தாழ்மையுள்ள ஒருவரையே தெரிந்துகொள்ள வேண்டும்" என்றேன்.

அது தான், சபையிலுள்ள ஒவ்வொரு பாகமும் இசைவாக இயங்கவேண்டும். நீங்கள் உங்கள் பாகத்தை வகிக்க வேண்டும், எனவே நாம் எந்த நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் காண்கிறோம். **நாம் நினைப்பதைக் காட்டிலும் அருகாமையில் இருக்கக்கூடும்.**

★★★★★

# சத்தியத்தை யாரோடும் ஒப்புரவாகாமல் பிரசங்கியுங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: உறுதி கொள்ளுதல் அதன்பிறகு அக்கறை கொள்ளுதல் 62-0610E

இன்று காலை சகோ.பார்க்கர், "தேவன் தமது ஜனங்களை நேசிக்கிறார்" என்றார். அவர் தமது ஆடுகளை நேசிக்கிறார். அவர், "அவைகளைப் போஷியுங்கள்" என்றார்.

ஆடுகளுக்கு ஆடுகளின் உணவு தேவை. அவர் ஒருபோதும், "என் ஆடுகளுக்கு கல்வி கொடுங்கள்" என்று சொல்லவில்லை.

அவர், "அவைகளைப் போஷியுங்கள்" என்று தான் கூறினார். "கல்வி கொடுங்கள்" என்றல்ல,

“போஷியுங்கள், அவைகளுக்கு ஆடுகளின் உணவைக் கொடுங்கள்.”

ஆடுகளின் உணவு என்றால் என்ன? ஜீவ அப்பம் (இயேசுவே ஜீவ அப்பம்), சுவிசேஷம், சத்தியம். யாரோடும் ஒப்புரவாகாமல் அதை பிரசங்கியுங்கள்.

சுவிசேஷத்தின் போதகர் என்னும் முறையில், அவர்கள் ஆத்துமாக்களுக்காக நீங்கள் பதில் கூற வேண்டியர்களாகும் போது, நீங்கள் தைரியமாக நின்று, “இப்படித்தான் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது” என்று கூறமுடியும். அவர்களுக்கு சத்தியத்தை போஷியுங்கள். என் ஆடுகளை போஷியுங்கள்.

# பிசாசு வந்து அதை திருடிக் கொண்டு போவான்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

மேலும் நீங்கள் தேவனுக்கென்று ஏதாவது செய்யும்படி உங்களுடைய இருதயத்தில் கொண்டிருந்து அதை வெளிப்படுத்தாமல் “நல்லது, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம், பின்னர் பார்ப்போம்” என்று அது போன்று உங்களுக்குள்ளே வைத்திருப்பீர்கள் என்றால் அப்போது நீங்கள் தேவனுக்கென்று சேவை செய்யும்படி ஒரு விசை கொண்டிருந்த அந்த சின்ன வாஞ்சையானது உங்களிலிருந்து எடுக்கப்படும். பிசாசு வந்து அதை திருடிக் கொண்டு போவான். அதன் பின் நீங்கள் அவருக்கு சேவை செய்யும்படி எந்த ஒரு வாஞ்சையும் கொண்டிருக்கமாட்டீர்கள்.

*செய்தி:* 63-0803M முதலீடுகள், அகஸ்டு 3, 1963

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

அதற்கு பெரிய படிப்பு அவசியமில்லை. இயேசு கிறிஸ்துவிடம் முழுவதும் அர்ப்பணித்த ஒரு இருதயம் தான் அதற்குத் தேவையாக உள்ளது




வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது,**

ஆகஸ்டு 22, 1950

கூடார கூட்டம், கிளிவ்லாண்ட், ஒஹியோ, அமெரிக்கா

18. இப்பொழுது, பரிசுத்த யாக்கோபு 3வது அதிகா - 2வது அதிகாரம் 21வது வசனம். இது ஏறக்குறைய வேதவாக்கியங்களில் முரண்பாடாக இருப்பது போன்று தோன்றுகிறது. ஆனால் வேதவாக்கியத்தில் முரண்பாடுகள் எதுவும் கிடையாது.

உங்களுக்குத் தெரியும்... வேதவாக்கியம் தன்னில் தானே முரண்படுகிறது என்று ஜனங்கள் கூறுகிறார்கள். அது அப்படியல்ல. பத்து வருடங்களாக, அங்கே என்னுடைய

மேடை - என்னுடைய பிரசங்க பீடத்தில் ஒரு சவால் வைக்கப்பட்டிருக்கிறது, தேவனுடைய வார்த்தையின் மூலமாக நேராக்கப்பட முடியாத, தேவனுடைய வார்த்தையில் ஒரு முரண்பாட்டையாவது காண்பிக்கக் கூடிய எந்த நபராவது இருக்கிறார்களா என்று (ஒரு சவால்). அது அவ்வாறு இல்லை. எல்லா வேதவாக்கியமும் கலந்ததாகவே காணப்படுகிறது. அது சரியே. அவை எல்லாமே சிறுசிறு பாகங்களாக பிட்கப்பட்டு (broke up), இங்கே பொருத்தப்பட்டிக்கிறது. அந்த காரணத்தினால் தான் வேதாகமக் கல்லூரிகளோ, வேதாகமப் பள்ளிகளோ ஒருபோதும் அதை அறிந்துகொள்ள முடியாது. ஞானிகளின் கண்களுக்கும் கல்விமான்களின் (prudent) கண்களுக்கும் அது மறைக்கப்பட்டு

கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய அப்படிப்பட்ட பாலகருக்கு வெளிப்படுத்தப்படும். நீங்கள்... அது நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள் என்பதல்ல...

19. குறிப்பிட்ட.... நான் ...எங்கிருந்து வந்தேனோ அந்த இடத்திலுள்ள மாகாணத்திற்கு அருகில், கென்டக்கியிலுள்ள ஒரு சிறு பையன்.

அன்றொரு நாள் யாரோ ஒருவர் கூறினார், அவர், “சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் கென்டக்கியின் எந்த பாகத்திலிருந்து வருகிறீர்கள்?” என்று கேட்டார். ஓ, என்னே. அது கென்டக்கிக்குப் போகும் வழியாக இருக்கிறது அங்கே அவர்கள்... போகும் வழி (Way down). அங்கே உள்ளே ஒரு சாலை கூட கிடையாது, வெறுமனே அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கும்

ஓடைகளை உடைய படுகைகளால் உண்டான பூமியாகத்தான் (creek bottoms) இருக்கின்றன.

எனவே அவர்களுக்கு ஒரு சிறு பழைய கிராமப்புற பள்ளிக்கூடம் இருந்தது. அவன் ஏறக்குறைய இரண்டாம் வகுப்பு படிக்கும் (second grade) சிறு பையனாக இருந்தான்... அவன் ஒருநாள் அங்கே எழுந்து, "டீச்சர், தேவன் என்னை பிரசங்கம் பண்ண அழைத்தார்" என்று கூறினான்.

ஏன், அவள் அவனைப் பார்த்து சிரித்தாள், தலைமயிர் அவனுடைய முகத்தில் தொங்கிக் கொண்டிருந்தது.

அவன், "கர்த்தர் என்னைப் பிரசங்கம் பண்ண அழைத்திருக்கிறார்" என்றான். அந்தப் பையனுக்கு பதினைந்து, பதினாறு

வயதிருக்கும் என்று நினைக்கிறேன். மேலும் சொன்னான்…

ஏன், அந்த ஆசிரியர், “நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அதைக் குறித்து மறந்து விடு” என்றாள்.

நல்லது, அவன் பள்ளியின் முதல்வரிடம் போனான். மேலும் ஓ, அவர்களால் அவனைப் பிரசங்கம் பண்ண விட முடியவில்லை.

ஆனால் ஒருசில மாதங்கள் கழித்து, தம்முடைய பெயருக்கு ஏதோவொரு மகத்தான D.D. பட்டத்தை உடையவராயிருந்த ஏதோவொரு பெரிய ஊழியக்காரர் அதனூடாக வந்தார். எனவே அந்தப் பள்ளியைக் கொண்டிருக்கலாம் என்று அவர்கள் அவருக்கு அனுமதி கொடுத்திருந்தார்கள். எனவே அவர் இரண்டு வார

கூட்டங்களில் பிரசங்கித்தும், ஒருபோதும் ஒரு மனமாற்றமும் இல்லாதிருந்தது.

20. இந்நிலையில், அந்தப்பையனுடைய தகப்பனார் அந்தப் பையன் உண்மையாகவே அழைக்கப்பட்டிருந்ததாக எண்ணினார். எனவே அவர் பள்ளி முதல்வரிடம் சென்று, "நீர் பிரசங்கம் பண்ண அவரை அனுமதித்திருப்பீரானால், நீர் ஏன் என்னுடைய மகன் ஒருமுறை முயற்சி செய்துபார்க்க அனுமதிக்கக் கூடாது?" என்று கேட்டார்.

எனவே அவர்கள் அங்கே இறங்கிச் சென்றார்கள், அவன் பிரசங்கம் செய்ய அவர் அனுமதி கொடுத்தார். அவர்கள் எல்லாரும்... அந்த இரவில் இந்தப் பையன் பேசுவதைக் கேட்க எல்லாரும் வெளியே வந்தார்கள். அவன் அங்கே எழுந்து நின்றான், அவனால்

வேதாகமத்தை வாசிக்கவே முடியாதிருந்தது. எனவே அவனுக்காக வேதாகமத்தை வாசிக்கும்படி செய்ய யாரோ ஒருவரை அவர்கள் பெற வேண்டியதாயிருந்தது. அவன் பிரசங்கம் பண்ணச் சென்றான்.

எனவே அவன் பிரசங்கம் பண்ண போன போது, தன்னைத்தானே குறிப்பிடும்படியானவராக அழைத்துக்கொண்ட (self-styled) அந்தச் சிறு ஆசிரியரும், அவரோடு கூட வேறு ஏறக்குறைய ஐம்பது பேர்களும் பீடத்தண்டையில் தங்களைக் கண்டடைந்து, அழுதுகொண்டே இயேசுவிடம் தங்களுடைய வழியில் வந்தார்கள். பாருங்கள்? அது சரியே. அங்கே தேசத்தின் அப்பாகத்தில் ஒரு உண்மையான எழுப்புதல் வெடித்து கிளம்பிற்று (broke out).

உண்மையாகவே நூற்றுக்கணக்கானவர்கள் கிறிஸ்துவிடம் வந்தார்கள்.

ஏன்? அதற்கு பெரிய படிப்பு அவசியமில்லை. இயேசு கிறிஸ்துவிடம் முழுவதும் அர்ப்பணித்த ஒரு இருதயம் தான் அதற்குத் தேவையாக உள்ளது. நீங்கள் எவ்வளவு படிப்பறிவில்லாதவர்களாக இருந்தாலும் பரவாயில்லை… "பேதையாக இருந்தாலும், திசைகெட்டுப் போவதில்லை…" அது சரிதானா?

★★★★★

# அவர்கள் இயேசுவோடு கூட இருந்திருந்தார்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

146. பேதுருவும் யோவானும் பேதமையுள்ளவர்களாகவும் படிப்பறியாதவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் முற்றிலுமாக படிப்பில்லாதவர்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் அவர்கள் இவர்கள் சொல்லுவதைக் (பேதுருவும் யோவானும் சொல்லுவதைக்) கவனிக்க வேண்டியிருந்தது, அவர்கள் இயேசுவோடு கூட இருந்திருந்தார்கள். அதுதான் பிரதான காரியம் ஆகும். அது சரியே. அலங்கார வாசல் என்னப்பட்ட வாசலண்டையிலே ஒரு மனிதனைச் சுகப்படுத்த போதுமான விசுவாசம் அவர்களுக்கு இருந்தது. பேதுரு அனனியாவிடம், "நீ பொய் பேசுகிறாய்" என்று கூறும்படிக்கு அவன் தனக்குள்ளே போதுமான தேவனுடைய வல்லமையை உடையவனாயிருந்தான். அது சரியே. "நீ பணத்தை உன்னிடமே வஞ்சித்து வைத்துக்கொண்டாய்; சப்பீராளே, நீயும் அதே காரியத்தைச் செய்திருக்கிறாய்." உடனே அது அவர்களை மிக மோசமாக பயப்படுத்தினதினால், அவர்களுக்கு

மாரடைப்பு ஏற்பட்டு, மரித்துப் போனார்கள். அவர்கள் இவர்களை பொதிந்து வெளியே எடுத்துக்கொண்டு போய், அடக்கம்பண்ணினார்கள். ஆமென். அதே தேவன் இன்றும் ஜீவிக்கிறார். அதே காரியத்திட்டம் தான் இன்றைக்கான தேவனுடைய திட்டமாகவும் இருக்கிறது.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★



























ஒரு மனிதன் என்று
எண்ணப்படத்தக்கவிதமாக
எப்பொழுதாவது ஒருவன்
இருப்பானென்றால், அவன் தனியாக
நிற்பவன் தான். அவன் தேவனுக்காக
தனியாக நிற்கிறான்; அவன் தான்
மனிதன்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 61-03-16 கிருபைக்குப் பதிலாக நியாயப்பிரமாணத்தை சபை தெரிந்து கொள்ளுதல்

---

**ஒரு மனிதன் என்று எண்ணப்படத்தக்கவிதமாக எப்பொழுதாவது ஒருவன் இருப்பானென்றால், அவன் தனியாக நிற்பவன் தான். அவன் தேவனுக்காக தனியாக நிற்கிறான்; அவன் தான் மனிதன்.**

அங்கே... "எரிகோ சாலையில் இரண்டு பேர் போவதற்கான இடம் தான் உண்டு, அதைவிட கூடுதலாகவோ குறைவாகவோ

ஆட்கள் போவதற்கான பாதை அங்கே கிடையாது, **அந்த இரண்டு பேர் யாரென்றால் இயேசுவும் நீங்களும் தான்,"** அவ்வளவு தான்.

எனவே நாம் அந்தவிதமாகத்தான் இந்த இடுக்கமான பாதையில் நடந்து போயாக வேண்டும்.

**தேவனுக்காக எப்பொழுதாவது எதையாவது செய்த ஒவ்வொரு மனிதனும் அதே பாதையில் தான் நடந்தனர். அது உண்மை.**

**அவர்கள் எல்லா காலங்களிலும், எல்லா நேரங்களிலும் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு, கைவிடப்பட்டு, தூக்கியெறியப்பட்டவர்களாய் அதே காரியத்தை சகிக்க வேண்டியிருந்தது.**

எனவே நாமும் அவர்களைப்போலவே இருக்கிறோம், அதே காரியம் தான்.

நாம் தனிமையாக நிற்க வேண்டியுள்ளது. ஆனால் நாம் ஒருபோதும் தனியாக இல்லை, அவர் எப்போதுமே அங்கே (நம்மோடு) இருக்கிறார்.

★★★★★

Only believe,
Only believe
All things are possible,
Only believe.


சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in